(பிரத்தியேக விநியோகத்திற்கு மட்டும்)

# எழுச்சி

அரசாங்க எழுது வினைஞர் சங்கம்

62, 1/5, குமாரன் இரத்தினம் வீதி, கொழும்பு-2.

எழுச்சி: 1 | திருவள்ளுவராண்டு 1993 – வைகாசி-ஆனி திங்கள் | இதழ்: 5-6

# கொள்கை எங்கள் பேச்சு! உரிமை எங்கள் மூச்சு!!

## கோலாகலமாக நடந்தேறிய முதலாவது மாநாட்டில் பிரதிநிதிகள் முழக்கம்!

*

(‘எழுச்சி’ சிறப்பு நிருபர்)

9-30 மணிக்கு மாநாடு என்று நிகழ்ச்சி நிரலில் போட்டிருக்கு. இப்போது நேரம் 9 ஆகிவிட்டது. இன்னமுமா நீங்கள் புறப்பட வில்லை. சங்கத்தின் தூண்களில் ஒருவரெனசுயவர்ணனை-விளம்பரம் செய்கிற உங்களின் இலட்சணமே இதுதானென்றால்-மற்ற உறுப்பினர்களைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை.........!


வீட்டு முற்றத்தை மேடையென நினைத்து முழங்கிக் கொண்டிருந்தாள் என் சக தர்மிணி. அவளுக்குத்தான் மாநாடு பற்றி எவ்வளவு கரிசனை!

மேடையேறி நாலு வார்த்தை பேசலாம் என்று நினைத்தாலே உடம்பெல்லாம் உதறல் எடுக்கிறது...‘நம்ம ஆள்’ எப்படி இவ்வளவு அனாயசமாகப் பொழிந்து தள்ளுகிறாள்’ என்று மனதுக்குள் வியந்து கொண்டே ‘மாநாடு 9-30 மணிக்கு ஆரம்பமாகும் என்று போட்டிருந்தால், 10-30க்குத்தானும் ஆரம்பமாவது குதிரைக் கொம்பு. அப்படி மீறி—வழக்கத்துக்கு மாறாக சரியாக 9-30க்கே ஆரம்பித்தால் எங்கள் பண்பாடு என்னாவது? உனக்கு உவையெல்லாம் தெரியாது’ என்று சொல்லி அவள் வாயை அடைத்தேன்!

அடுத்த கணம் நேரத்தோடு மாநாட்டுக்குப் போனால்—பழைய நண்பர்களைப் பார்க்கலாம், அவர்களோடு அளவளாவலாம் என்ற எண்ணம் தலைதூக்கவே மாநாடு நோக்கிப் புறப்பட்டேன்.

தென் மேற்கு பருவப் பெயர்ச்சிக் காற்று அளவாக வீசிக் கொண்டிருந்தது. (எழுத்தாளர் நடையில் சொல்ல வேண்டுமானால் தென்றல் மெல்ல தவழ்ந்துகொண்டிருந்தது. ஆனால் நாம் தான் எழுத்தை ஆளுபவர்கள் அல்லவே—எழுத்தை வெறும் வினைஞாகக் கொண்டவர்கள்தானே!)

(2ம் பக்கம் பார்க்க)



திரளாக வருகை தந்திருந்த பிரதிநிதிகள் மத்தியில் கொள்கை முழக்கம் செய்கிறார் சங்கத்தின் செயலாளர் திரு. பாலசுப்பிரமணியம்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதைக் கொஞ்சம் மிஞ்சும் வகையில் நல்ல இனிமையான நாகசுர ஓசை சற்றுக் காதில் வந்து விழுகிறது. என்ன தெரியாமல் யாராவது ஒருவருடைய திருமண வீட்டில் அழையா விருந்தாளியாக நுழையப் போகிறோமா?

அப்பா தப்பினேன். வருக! வருக! என்று கை கூப்பி வரவேற்றது மாநாட்டு நுழைவாயிலில் வீதிக்குக் குறுக்கே கம்பீரமாக அசைந்தாடிக்

# மானம் ஒன்றே

கொண்டிருந்த கொடி! அரசாங்க எழுது வினைஞர் சங்க 1வது ஆண்டு மாநாடு என்று பெரிய சிவப்பு எழுத்தில் போட்டிருந்த அறிவித்தல் கண்ணில் பளிச்சிட்டது!

அது மட்டுமா? உள் வாயில் முற்றம் முழுதும் **செங்கொடிகள்** இரு மருங்கும் பறந்துகொண்டிருந்தன!

'வகுப்பு வாதிகள்' 'குழப்பவாதிகள்' செங்கொடிக்குச் சொந்தம் கொண்டாடுவதா? பொதுவுடமை தங்கள் தனியுடமையென மார் தட்டும் எங்கள் அருமைத் தோழர்கள் இந்தக் காட்சியைக் கண்டால் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்வார்களே!

நுழை வாயிலில் காட்ட வேண்டிய சீட்டைக் காட்டி—போடவேண்டிய கையெழுத்தைப் போட்டு விட்டு உள்ளேசென்றுமெல்லக் கழக மண்டபத்தை கண்ணோட்டம் விட்டேன்.

என்ன ஆச்சரியம்! சற்றும் எதிர் பாராத வகையில் மண்டபம் நிரம்பி வழிய ஆயத்தமாகிக்கொண்டிருந்தது. முன் பக்கத்தில் ஒரு சில நாற்காலிகள் மட்டும் காலியாகக் கிடந்தன. ஏனைய இடங்களை எழுதுவினைஞர் படை ஆக்கிரமித்துக்கொண்டிருந்தது.

எட்டுத் திக்கும் பதினாறு கோணமும் பார்வையைச் சுழலவிட்டுக் கொண்டிருந்த பொழுது எனது தோள்களைப் பின்னாலிருந்து கொண்டு உரிமையோடு யாரோ குலுக்கினார்கள்! 'நேர் எதிர் வந்து பொருதாமல்—பின்னால் இருந்து தாக்கும் அந்தப் பேடி யார்? பேர் எதுவோ? என்று நாடக பாணியில் என் மனதுக்குள்ளேயே கேட்டுக் கொண்டு திரும்பிப் பார்த்தேன்! என் பழைய நண்பன். வாயெல்லாம் பல்லாகச் சிரித்துக்கொண்டு இல்லை, இழித்துக்கொண்டு நின்றான்.

'என்ன பட்டிக்காட்டான் மிட்டாய் கடையைப் பார்த்த மாதிரி வாயைப் பிளந்துகொண்டு நிற்கிறாய்' நண்பன் என்னைக் கேலி செய்வதில் முந்தினான்.

'இல்லை. வழக்கமாக இப்படியான மாநாடுகளில் வழங்கப்படும் துண்டுப் பிரசுரங்கள், வேட்பாளர் பத்திரங்கள் ஒன்றையுமே காணோமே? இந்தச் சங்கத்தில் போட்டி, பொறாமை, கோஷ்டிச் சண்டை, பதவி ஆசை ஒன்றும் இல்லை போல் தெரிகிறதே! இவையெல்லாம் இல்லாத சங்கம் ஒரு சங்கமா?' என்று நான் என் நண்பனைப் பார்த்துச் சலித்துக் கொண்டேன். பின் அவனையும் இழுத்துக்கொண்டு போய் இரண்டு இடங்களைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துகொண்டோம்.

சற்றைக்கெல்லாம் நாகசுர இசை நின்றது. அத்தான் கவிஞரின் 'போனால் போகட்டும் போடா' என்ற பாட்டை ஒலிபெருக்கி ஒலித்தது. ஏன் இந்தப் பாட்டை இந்தச்

# பெரிதெனக் கொண்டு

சந்தர்ப்பத்தில் வைத்தார்கள்என்ற மர்மம் எனக்கு விளங்கவில்லை. ஒருவேளை பழைய சங்கத்துக்கு நாம் எல்லாம் கொட்டிக் கொடுத்த சரீர உழைப்பும்—நல்கிய பொற்காசுகளும் போனால்போகட்டும் போடா என்று சமாதானப்படுத்துகிறார்களா என்ன?

பாட்டு நின்றது. நமது சங்க இளம் செயலாளர் பின்தொடர, தலைவர் மேடையில் வந்து அமருகிறார். கீழே உட்கார்ந்திருந்த பொருளாளரும் மேடைக்குப் போய்விடுகிறார்.

அடுத்து தோழர் ஒருவர் இனிமையான குரலில் தமிழ்த் தாய் வணக்

# வாழ்வது நமது சமுதாயம்!

கம் பாடி முடிக்கிறார். பொருள் பொதிந்த அந்தப் பாட்டின் சாகித்திய கர்த்தா யாரென்று தெரியவில்லை. ஆனால் மனோன்மணியம் இயற்றிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய

''பல்லுயிரும் பல வுலகும்
படைத்தழித்து காத்திடும்
எல்லையறு பரம் பொருள்போல்...!''

என்று தொடங்கும் பாடலைப் பாடியிருந்தால் தமிழ்த் தாய் வணக்கம் இன்னும் அற்புதமாக இருந்திருக்கும் என்பது என் எண்ணம்!

ஏதோ ஞாபகம் வரவே துள்ளிப் பதைத்து கடிகாரத்தைப் பார்த்தேன். நேரம் சரியாக 9-35. 'அட 'பாபி'களே'! சொன்னது சொன்னதுபோல சரியான நேரத்துக்கு மாநாட்டை ஆரம்பித்துவிட்டீர்களே! நீங்கள் நல்லாயிருப்பீர்களா......!? இப்படி வாய்விட்டுக் கத்த வேண்டும் போல் இருந்தது!

சங்க ஆண்டு அறிக்கையை சம்பிரதாய முறைக்கு செயலாளர் சபையின் கவனத்துக்கு வைத்தார். தொடர்ந்து அறிக்கை விவாதத்துக்கு விடப்பட்டிருப்பதாக தலைவர் அறிவித்தார்.

சபையில் மயான அமைதி. மேடையேறும் முதல் தோழரை அந்த மண்டபத்தில் உள்ள அறுநூறு பேர்களது ஆயிரத்துஇருநூறு கண்களும் படம் பிடிக்க இமைக்காது ஆயத்தமாக இருக்கின்றன. வினாடிகள் ஒன்று, இரண்டு, மூன்று என்று நகர்கின்றன. ஒருவராவது நெஞ்சை முன்னுக்குப் போட்டுக் கொண்டு பேச முன் வரவேண்டுமே? ஊம்!

எனக்குத் தலை கால் தெரியாத மகிழ்ச்சி. ஏதோ நமக்குத்தான் இந்த மேடைப் பேச்சுக் கலை கைவராத ஒன்று என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். இப்போது மற்றவர்கள் என்னைவிட என்ன உசத்தி? மகிழ்ச்சி இப்போது தலை வீக்கத்துக்கு இடந்தர, இருந்த இடத்திலேயே நெஞ்சை நிமிர்த்தி உட்கார்ந்துகொண்டேன்! அப்படி நான் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டேனோ இல்லையோ, மண்டபத்தின் முன் வலது கோடியில் இருந்து மாம்பழ நிறத் தோழர் ஒருவர் கையில் அறிக்கையுடன் ஒலிபெருக்கியை நோக்கி நடக்க ஆரம்பித்தார். என் மகிழ்ச்சி—குதூகலம் இருந்த இடம் தெரியாமல் பறந்தது!

தோழர் ஒலிபெருக்கி முன் வந்து நின்று 'அன்புள்ள தலைவர் அவர்களே........' என்று ஆரம்பிக்குமுன்னே அவரை இன்னாரென்று அடையாளம் கண்டுபிடித்துவிட்டேன்!

அரசாங்க லிகிதர் சங்கத்தில் ஈடுபாடு கொண்டு முன் நின்று உழைத்த தோழர்கள் பலருக்கு

(4ம் பக்கம் பார்க்க)

## புதிய தொழிற் சங்க சுலோகம்

# " (மொழி வழி) பிரிந்தால் வாழ்வோம்; இன்றேல் வீழ்வோம்!"

தொழிற் சங்க வட்டாரங்களிலும், முக்கியமாக இன வேற்றுமை கடந்த தொழிலாளர் ஒற்றுமையில் நம்பிக்கை கொண்டிருந்த தமிழ்த் தொழிலாளர்களிடையேயும் அண்மையில் அதிர்ச்சி அளித்த சம்பவம் தான் லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கச் செயலாளர் திரு. செல்லையா தான் 20 ஆண்டுகள் வளர்த்து வந்த தொழிற் சங்கத்திலிருந்து விலகியதும் அதையடுத்து அவர் விட்ட அறிக்கையும்.

தனது விலகலுக்கு அவர் காட்டிய காரணங்களில், எம்மைப் பொறுத்த மட்டில், முக்கியமானவை மூன்று. அவை யாவன:

(1) தனது அரசியற் கட்சி (லங்கா சமசமாஜக் கட்சி) வடகிழக்கில் வதியும் தமிழரின் உரிமைகளைப் பற்றி ஒரு உறுதியான கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை.

(2) தோட்டத் தொழிலாளரின் நல்வாழ்வில் கட்சி போதிய அக்கறை காட்டவில்லை—தொழிலாளர் தமிழரானபடியால். (அரசாங்கம் கொண்டுவரவிருக்கும் தோட்டத் தொழிலாளர் மசோதாவைக் கட்சி கண்டியாததைக் குறிப்பிடுகிறார் போலும்).

**(3) தமிழரோ, இஸ்லாமியரோ கட்சியின் தலைமைப் பீடத்திலேறுவதற்கு உறுப்பினர்கள் விரும்புவதில்லை. காரணம் கட்சியில் புரையோடிவிட்ட வகுப்பு வாதம்.**

முதலாவது குற்றச்சாட்டு ஒரு மார்க்சியக் கட்சியின் வெளிப்போர்வையைக் கிழித்து எறிவதாயிருந்தாலும் இது அரசியற் பிரச்சினையென்ற முறையில் இதை தொடாது விடுகிறேன்.

நாம் லிகிதர் சங்கத்தில் கற்ற பாடத்தை நமது தோட்டத்தொழிலாளர் கூட கற்க வேண்டி வந்ததேயென்று (ஓரளவுதான்) ஆச்சரியப்படுகிறேன். ஏனெனில், நடுத்தர வகுப்பினரை ஒரு புரட்சி உண்டாக்குவதற்கு நம்ப முடியாது; ஆனல் தோட்டத் தொழிலாளர்தான் புரட்சிக்கு வித்து என்பதுதான் இக்கட்சியின் கொள்கையாயிருந்து வந்தது. அதன்படியேதான், இலங்கை இந்தியர் காங்கிரஸ் தோட்டத் தொழிலாளரின் ஏக பிரதிநிதியாயிருந்த காலத்திலேயே, தோட்டங்கள் தொழிற் சங்கமமைத்துக் கட்டிக் காத்து வந்தது. காலத்தின்

**('சிவா')**

கோலமென்னே! இது விஷயத்திலேகூட அடிப்படைக் கொள்கையை உதறி எறிய வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது! முன்னர், லிகிதர் சங்கத் தலைமை பீடம் பெரும்பான்மைச் சமூகத்தினரின் ஆதரவை இழப்போமென்று பயந்து, தமிழ் ஊழியரின் இடர்களுக்கு பரிகாரம் தேடாதது மட்டுமல்லாது அநீதியை வரவேற்றது. இன்று ல. தோ. தொ. ச. வின் தலைமை பீடம் அதே காரணத்தால் அரசாங்கம்கொண்டுவர இருக்கும் தோட்டத் தொழிலாளர் மசோவைக் கண்டிக்காது வாழாவிருக்கிறது. இரு சம்பவங்களிலும் கொள்கைகள் காற்றில் பறக்கவிடப்பட்டன, பாதிக்கப்பட்டோர் தமிழ்த் தொழிலாளரானபடியால்.

> **இளமைப் பருவம் வாழ்வின் வசந்த காலம். அத்த வசந்த காலத்தை இன வேற்றுமை கடந்த தொழிலியக்கத்தைக் கட்டியெழுப்பத் தத்தம் செய்தவர் தோழர் செல்லையா. ஆனல் இன்று வேதனையோடு கூறுகிறர் 'வகுப்புவாத வெப்பம் தாங்க முடியாமல் வெளியேறுகிறேன்' என்று.**
>
> **நேற்று நாம் கற்ற பாடத்தை இன்று தோழர் செல்லையா கற்றிருக்கிறர். நாளை தமிழினத் தொழிலாளர் எல்லோருமே கற்கப் போகிறர்கள் என்பது நமது அசைக்க முடியாத நம்பிக்கை!**

இரண்டாம் குற்றச்சாட்டுக்குப் பின் மூன்றுவதற்கு அவ்வளவு விளக்கம் தேவையில்லை. என்றலும் ஒன்று சொல்ல வேண்டும். நாம் லிகிதர் சங்கத்திலிருந்து விலகுவதற்கு முந்திய ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் தலைவரான திரு. நித்தியானந்தன் போட்டியிட்ட பொழுது ஒரு தமிழனுக்குத் தலைமை பீடத்தில் இடமிருக்கக்கூடாது என்று செய்யப்பட்ட பிரசாரத்தை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். (வெட்கமும் வேதனையும் படவேண்டிய இவ் ஈனப் பிரசாரத்திற்கு உடந்தையாயிருந்த தமிழர் கதை வேறு விடயம்.) வெவ்வேறு முனையிலும் ஒரே இனக் கொள்கைதான்.

திரு. செல்லையாவின் அறிக்கையில் தனது இளமையையே தனது தொழிற் சங்கத்திற்கு அர்ப்பணித்ததாக வேதனைப்படுகிறர். பாவம்! எல்லாம் விழலுக்கிறைத்த நீராய் போய்விட்டது. ஒருவர் படிக்கும் பாடத்திலிருந்து மற்றவருக்குத் தெளிவு ஏற்பட்டால், அவருக்கும் நல்லது, அவரின் சமூகத்திற்கும் நல்லது. பூனைகூட சூடு கண்டால் அடுப்பங்கரையை நாடாதாம். ஆனல் எம்மவர் சிலர், நெருப்பு சுடுமென்று சொன்னலும், நெருப்புக்குள் கையை வைத்து சூடு என்பது என்ன என்று அறிய முனைகின்றனர். ''தம்பி! மொழி வேற்றுமை கடந்த தொழிலாளர் ஒற்றுமை என்பது ஒரு கானல் நீர்; அதை நோக்கிச் சென்றல் தண்ணீரும் கிடைக்காது; நா வறட்சி அதிகரித்து உயிருக்கே ஆபத்தாகும் என்றல் ''இல்லை! இல்லை! அது கானல் நீரல்ல; அது பசுமையும் குளுமையும் நிறைந்த சிற்றேடை'', என்று சொல்லிச் சென்று இடர்ப்பட விரும்புகின்றனர் சிலர்.

எது ஓர் உயர்ந்த இலட்சியம் என்று எண்ணி அதற்காகத் தனது இளமைப் பருவத்தையையே அர்ப்பணித்தாரோ அவரே கூறுகிறர், அது கானல் நீரென்று. அவரின் ஏமாற்றம் கலந்த அனுபவம் எமக்கொரு சரியான பாடமாக அமைய வேண்டும், நாம் உய்வதற்கும், அவரின் வேதனையைச் சற்றேனும் தணிப்பதற்கும்.

ஆகையாற்றன் மீண்டும் கூறுகிறேன்: இன வேற்றுமை கடந்த தொழிலாளர் ஒற்றுமை வெறும் கானல் நீர்; ஒரு நெருப்பு. அதைத் தொட்டால் சுடும்; தொடர்ந்தால் ஏமாறுவோம்! ஆகவேதான் நாம் குரல் எழுப்புகிறேம் (தொழிற்சங்க தளத்தில்) ''மொழி வழி பிரிந்தால் வாழ்வோம்; இன்றேல் வீழ்வோம்.''

# உரிமை கேட்பது வகுப்புவாதமென்றால் சாகும் வரை அதையே கேட்போம்!

(2ம் பக்கத் தொடர்ச்சி)

திரு.வித்தியானந்தசர்மாவின்முகம் கொஞ்சமும் புதிதல்ல! அன்றைய அ.லிகிதர்சங்கத்தின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் உயிரை விட்டுஓடியாடி உழைத்தவர். சங்கத்தின் ஆட்சிக் குழுவிலும்(Council of Management) பல காலம் இருந்தவர்.

அப்படிப்பட்ட தோழர் சர்மா என்ன சொல்லப் போகிறாரென்று காதைத் தீட்டிக்கொண்டு கேட்டேன்.

'எழுச்சி இதழ் ஒவ்வொன்றும் நன்றாக இருக்கின்றன. அதன் நடை, ஒருவித அலங்கார நடை, போற்றத்தக்கதாக இருக்கிறது. நடை நல்லதென்று சொல்லும் பொழுது கருத்து இல்லையென்றல்ல அர்த்தம். கருத்தும் தாராளமாக இருக்கிறது. அரசாங்க சேவையில் உள்ளவர்களாலும் இப்படி அழகு தமிழில் எழுத முடியும் என்கிற செய்தி நேற்று வரை ஒருவருக்கும் தெரியாமல் இருந்தது .....' என்ன முற்றுப்புள்ளி இல்லாமல் ஒரேயடியாகப் பாராட்டிக்கொண்டு போகிறார் என்று எண்ணிய பொழுது தோழர் சர்மா ஒரு 'ஆனால்'போட்டார்.

'ஆளை உசத்தி இறக்குவதில்' யாழ்ப்பாணத்தான் கெட்டிக்காரன் என்ற ஒரு பொதுஅபிப்பிராயம் உண்டு. அது போல் எழுச்சி ஆசிரியரை இனித் தோழர் இறக்கி வைப்பாரென்று எதிர்பார்த்தேன். ஆனால் அதிலும் கொஞ்சம் ஏமாற்றம்தான்.

'சென்ற எழுச்சி இதழில் 'திராவிடப் பாட்டாளி மக்களே, ஒன்று சேருங்கள்' என்று போட்ட முன் பக்க தலைப்புச் செய்தி எங்கள் மட்டுநகர் பகுதியில் பெரிய பரபரப்பை உண்டாக்கிற்று. இப்படி அபிப்பிராய பேதத்திற்கு இடங்கொடுக்கும் செய்திகள் எழுச்சியில் இடம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. வேண்டுமென்றால் அந்தச் செய்தியை கடைசிப் பக்கத்தில் போட்டிருக்கலாம்' என்று முடித்தார் தோழர் சர்மா.

தோழர் சர்மாவுக்குப் பின் மீண்டும் சபையில் பல வினாடி அமைதி நிலவிற்று.

திரு. சர்மா பழைய 'க்ட்டை.' பயமில்லாமல் மேடையேறிப் பேசிவிட்டார். மற்றவர்களால் இப்படிப் பேச முடியுமா? இப்படி என் மன ஓட்டம் இருந்தது.

இதை ஞானதிருஷ்டியினால் கண்டு பிடித்துவிட்டவர் போல தலைவர், 'விவாதம் 'சப்'பென்று இருக்கக் கூடாது. எவ்வளவு தூரம் தோழர்கள் எங்களைப் பற்றி குறை கூற முடியுமோ அவ்வளவு தூரம் குறை கூற முன் வர வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

'குறைகூறுவதுதானே நமது பரம்பரை வழக்கம். அதை ஒரு கலையாகக்கூட உருவாக்கிக் கொண்டவர்கள் தமிழர்கள் ஆயிற்றே! பின் ஏன் இந்தத் தயக்கம் ? ஓகோ தலைவர்-செயலாளர் முகத்துக்கு நேரே எப்படிக் குறை கூறுவது என்று சபை தயங்குகிறதோ?'

'இல்லை' என்று சொல்லுவது போல தோழர் பஞ்சாட்சரம் மேடையில் போய் நின்றார்.

அவரது குறைபாடும் எழுச்சியைப் பற்றித்தான் இருந்தது.

'எழுச்சியில் வள்ளுவராண்டை ஏன் போடவேண்டும்? வழக்கமாகப் போடும் 1962 என்ற ஆண்டைப் போட்டால் என்ன? எழுச்சியில் வள்ளுவராண்டு இடம் பெறுவதைக் கண்டு ஒரு கிறிஸ்தவ உறுப்பினர் சங்கத்தை விட்டே விலகப் போவதாகச் சொல்லுகிறார்' என்றார்.

இந்தக் குற்றச்சாட்டுதல்களுக்கு எழுச்சியின் ஆசிரியர் மேடையேறிப் பதில் அளிப்பார், அதே நேரத்தில் அவரையும் ஒருக்கால் பார்த்துவிடலாம் என்ற ஆசையோடு நானிருந்தேன்.

ஆனால் ஆசிரியர் இறுக்க வேண்டிய மறுமொழியை இறுக்க வேறொரு முறுக்கு மீசை வாலிபர் மேடைக்கு வந்தார். அவர்தான் என்னுடைய உற்ற நண்பன் தோழர் கோடீச்சுவரன். நான் எப்போதோ நினைத்தேன். திராவிடம், திருவள்ளுவர் என்ற சொற்களைக் கேட்டாலே போதும்; தோழர் கோடீச்சுவரன் சபையின் எந்த மூலையில் இருந்தாலும் வில்லிலிருந்து விடுபட்ட அம்பு போல மேடைக்குப் பாய்வாரென! காரணம் தமிழகத்திலிருந்து வீசும் பகுத்தறிவு வாடையில் நெடுங்காலம் குளிர் காய்ந்தவர், அவர்!

எனவே எதிர்பார்த்தது போல திராவிடம்—தமிழ் ஒரு பொருள் குறிக்கும் இரு சொல் எனவும், திருவள்ளுவர் எம்மதத்தையும் கடந்த பொது ஞானி எனவும் விளக்கம் கூறினார்.

தோழர் கோடீச்சுவரனுக்குப் பிறகு ஒருவர் பின் ஒருவராக 'கியூ' வரிசையில் மேடையேறிப் பேசத் தொடங்கினார்கள். அதில் பெரும்பாலோர் நல்ல இளவட்டங்கள். எழுது வினைஞர் 'ஜாதி'யை மிக இலேசாக பீடிக்கும் சோம்பல், விரக்தி மனப்பான்மை, இராமன் ஆண்டாலென்ன—இராவணன் ஆண்டாலென்ன என்ற இரண்டும் கெட்டான் மனப் போக்கு; காலைப் பிடித்தோ, கையைப் பிடித்தோ, கெஞ்சியோ, கும்பிட்டோ, கூத்தாடியோ வயிற்றைக் கழுவினால் போதும்; தானுண்டு—தன் குடும்பம் உண்டு என்ற கொள்கை—குறிக்கோள் அற்ற பஞ்ச புத்தி—இந்த நோய்களுக்கு இன்னமும் பலியாகாத வச்சிர நெஞ்சு படைத்த வாலிபர்கள் கொஞ்சு தமிழில் ஆணித்தரமாகப் பேசினார்கள்.

ஒவ்வொருவரும் தங்களுக்கு எட்டிய அளவில் அரசாங்க ஊழியர்களை எதிர் நோக்கி நிற்கும் சிக்கலானபிரச்சனைகளைஅலசியாராய்ந்து பார்த்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் பேச்சுக்களிலிருந்து அறிய முடிந்தது.

அவர்கள் கொட்டிய வார்த்தைகள் புண்பட்ட நெஞ்சிலிருந்து வடிந்த இரத்தத் துளிகள் என்பது சொல்லாமலே தெரியக் கூடியதாக இருந்தது!

வஞ்சிக்கப்பட்டுவிட்டோம் என்பதால் அரசாங்கத்தின் மீது கோபமும், தாபமும்; எதுவரினும், என்ன நேரிடினும் அஞ்சமாட்டோம் என்பதில் வீரமும், மானமும் அவர்கள் பேச்சில்இழையோடி மின்னிட்டன.

(5 பக்கம் பார்க்க)

(4ம் பக்கத் தொடர்ச்சி)

# எது வரினும் என்ன நேரிடினும்

திருமலையில் இருந்து வந்த இளம் தோழர் ஒருவர்—பெயர் நாகராசா. உணர்ச்சியோடு, எதுகை—மோனை கலந்த செந்தமிழில் உரையாற்றினார்.

கூட்டுறவு துணைக் களத்தைச் சார்ந்த தோழர் சிற்றம்பலம் அரசாங்க லிகிதர் சங்கம் என்னென்ன விதத்தில் அதில் உள்ள தமிழ் உறுப்பினர்களை ஏமாற்றி வருகிறதென்பதை எடுத்துச் சொன்னார்.

தோழர் சிவசோதி பேசும் பொழுது தனிச் சிங்களச் சட்டம் எதற்காக, ஏன் கொண்டு வரப்பட்டதென்பதை ஆராய்ந்து சிந்தித்துப் பார்த்தால்—சிங்களம் படிப்பதா? இல்லையா? என்ற கேள்விக்கு விடை சுலபமாகக் கிடைக்குமென்று எடுத்துரைத்தார்.

அன்று காலை நிகழ்ச்சியில் பங்கு பற்றித் தங்கள் நகைச்சுவைப் பேச்சாலே சபையின் கவனத்தைக் கவர்ந்த இன்னும் இரு பேச்சாளர்களது பெயர்களை இங்கு குறிப்பிட வேண்டும்.

தோழர்கள் பாலசுப்பிரமணியம், கதிர்காமத்தம்பி இந்த இருவரும் தான் அந்த நகைச்சுவைப் பேச்சாளர்கள். இவர்களில் தோழர் பாலசுப்பிரமணியம் சபையோரை ஒரு அரை மணித் தியாலத்துக்குக் குறையாமல் விழுந்த–விழுந்து சிரிக்கப் பண்ணினார். அவரது நகைச்சுவைப் பேச்சுக்கு அவரது தோற்றம் மிக உதவிற்று.

சுருக்கமாகக் குறிப்பிட வேண்டுமென்றால் பேசிய தோழர்கள் கீழ்க் கண்ட விடயங்களை வற்புறுத்திப் பேசினர்.

* சிங்களம் படிப்பதில்லையென்ற முடிவுக்கு பழைய-புதிய சேவையாளர்கள் இருவருமே கட்டுப்படல் வேண்டும்.

* சிங்களம் படிப்பதில்லையென்ற முடிவினால் எழும் பிரச்சனைகளுக்கு (வேலை நீக்கம் போன்றவை) சங்கம் தகுந்த மாற்று நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

* அரசாங்க லிகிதர் சங்கம், அ. எ. வினைஞர் சங்கம் இரண்டிலும் உறுப்புரிமை வகிப்போர், இரண்டு தோணிகளில் கால் வைத்தவன் நிலைக்கு உள்ளாகாமல், முன்னதிலிருந்து உடனடியாக விலகல் வேண்டும்.

* அ. எ. சங்கத்தில் இதுவரை உறுப்பினர்களாகச் சேராமல் இருப்போரை அணுகி, அவர்களை உறுப்பினராகச் சேர்த்தல் வேண்டும்.

* சாத்தியப்பட்ட இடங்களிலெல்லாம் மொழிவாரி அடிப்படையில் தொழிற் சங்கம் நிறுவி, அவற்றை ஒரு தனி சம்மேளனத்தின் கீழ் பணியாற்ற வைத்தல் வேண்டும்.

* தமிழ் அரசாங்க ஊழியரின் வருங்காலம் வட-கீழ் மாகாணங்களின் பொருளாதார அபிவிருத்தியில் அடங்கி இருப்பதால், நாம் கமத் தொழில் — கைத்தொழில் துறைகளில் கவனத்தையும் கருத்தையும் திருப்பல் வேண்டும்.

* சங்கத்தின் வருடாந்த மாநாடுகள் ஈழத் தமிழ்ப் பட்டினங்களிலும் நடைபெறல் வேண்டும்.

கிட்டத்தட்ட இரண்டரை மணித் தியாலங்களாக அக்கு வேறு

# அஞ்சிடோம்

ஆணி வேறாக ஆண்டறிக்கையைப் பிய்த்துப் பிடுங்கி சபை விவாதித்துக் களைத்துப் போகவே, ஆட்சிக் குழுவின் சார்பில், எழுப்பப்பட்ட வாதப் பிரதிவாதங்களுக்கு விடையிறுக்க, நமது சங்கத்தின் செயலாளர் தோழர் பாலசுப்பிரமணியம் (பெயரைப் போலவே ஆண்டு இருபத்தைந்தும் கடவாத இளைஞர்) முன் வந்தார்.

மிக மெல்லிய குரலில், ஓசைப் படாமல் ஆரம்பிக்கப்பட்ட அவரது தொகுப்புரை, சில விநாடிகளில் உணர்ச்சி வெள்ளமாகப் பாய்ந்தோடத் தொடங்கிற்று!

சங்கத்தின் ஆரம்ப கால வரலாற்றை கல்லும் கசிந்துருகும் வகையில் விளக்கிவிட்டு, ‘பறிக்கப்பட்ட உரிமைகளைக் கேட்பது, அவற்றிற்கு வாதாடுவது வகுப்புவாதமென்றால், அந்த வகுப்புவாதம் எங்களுக்குக் கட்டாயம் வேண்டும், அதையே நாம் சாகும்வரை கேட்போம்! இதைஎம்மீது சேற்றை அள்ளி இறைக்கும் தோழர்கள் புரிந்துகொள்ள வேண்டும்’ என்று உணர்ச்சியின் உச்சக் கட்டத்தில் நின்று செயலாளர் சங்கநாதம் செய்த பொழுது சபையோர் கையொலிஎழுப்பி ஆரவாரம் செய்தனர்.

ஆங்காங்கு தனது உரையில் உணர்ச்சி வசப்பட்டு, குரல் தளதளக்கத் தோழர் பாலசுப்பிரமணியம் பேசியதைக் கேட்டு ஒரு சிலர் கண்ணீர் விட்டதாகக்கூடப் பின் கேள்விப்பட்டேன்!

ஆண்டறிக்கை ஏகமனதாகச் சபையாரால் ஏற்றுக் கொள்ளப் பட்ட பின், சங்க ஆண்டு நிதி அறிக்கையும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நேரம் இப்போது 12-30 தை தாண்டிக்கொண்டிருந்தது. செவிக் குணவு இல்லாமல் போகவே–சிறிது வயிற்றுக்கு உணவு பற்றி சபை யோசிக்கத் தொடங்கியது!

ஆனால் தலைவர் கூட்டத்தை ஒத்தி வைப்பதாக இல்லை. நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவையும் முடித்துத் தருமாறு சபை கேட்கப் பட்டது.

தலைவர், உபதலைவர்கள், செயலாளர், பொருளாளர் இவர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப் படவே, உப பொருளாளர்கள் (2), செயற் குழுவினர் (21) தேர்தல் மள மளவென்று நடந்து முடிந்தது.

சபை ஆவலோடு எதிர்பார்த்திருந்த இடை வேளை ஒத்தி வைப்பு அறிவித்தலை தலைவர் இப்போது சொன்னார்.

நான்கு மணித் தியாலங்கள் முடங்கிக் கிடந்த உறுப்பினர்கள் இப்போது நகரத் தொடங்கினர்.

முன் வரிசையில் இருந்த நானும் எழும்பி நின்று இரண்டு பக்கமும் கண்ணோட்டம் விட்ட பொழுது நெஞ்சு ‘திக்’கென்றது!

(இடை வேளை)

# ★ ★ நாம் துஞ்சிடோம்! ★ ★

# எழுச்சி

1962 ம் ௵ ஆனி திங்கள்

## கொடி நாட்டுவீர்!

——:0:——

**வெள்ளம் போல் தமிழர் கூட்டம்**
**வீரங் கொள் கூட்டம்; அன்னார்**
**உள்ளத்தால் ஒருவரே மற்றுடலினுல்**
**பலராய்க் காண்பர்.**

என்ற புரட்சிக் கவி பாரதிதாசனின் பைந்தமிழ் கவிதைக்கு இலக்கணமாகவும், இலக்கியமாகவும் விளங்கியது எல்லா விதத்திலும் சிறப்பாகவும்—வெற்றிகரமாகவும் நடந்து முடிந்த அரசாங்க எழுதுவினைஞர்சங்க முதலாவது மாநாடு.

எண்ணிக்கையில் முதல் மாநாடு என்ருலும் முதல் தர மாநாடு என்பதை யாரும் மறைக்கவோ மறக்கவோ முடியாது.

**எண்ணத்தில் புது எழுச்சியை**
**கருத்தில் மறுமலர்ச்சியை**
**இதயத்தில் நம்பிக்கை ஒளியை**

ஒரு சேர உண்டாக்க மாநாடு அருந் துணை புரிந்துள்ளது.

எமது இனத்தின் ஆற்றலுக்கு, உழைப்புக்கு மாநாடு ஒரு எடுத்துக்காட்டு. நற்சான்றிதழ்.

முன்பும் சங்கத்தில் இருந்தோம். மாநாடுகளிலும் கலந்துகொண்டோம்.

இப்போதும் சங்கத்தில் இருக்கிருேம். மாநாடு ஒன்றிலும் கலந்துகொண்டுள்ளோம்.

ஆனல் இரண்டிற்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம்!

அங்கே எமக்குள் இருந்த உறவு முறை வேறு.

இங்கே எமக்குள் இருக்கும் உறவு முறை வேறு.

அங்கே காண முடியாத, அனுபவிக்க முடியாத இனவுணர்ச்சி, பாசவுணர்ச்சி இங்கே நிறைய இருக்கிறது!

அங்கே இருக்கும் பொழுது ஓடும் புளியம் பழமும் போல இருந்தோம்.

இங்கே செந்தமிழும் சுவையும்போல, மகர யாழும் ஒலியும் போல, வீரனும் போர் வாளும் போல பிரிக்க முடியாதபடி இருக்கிருேம்!

அங்கே பின்னணியில்—திரை மறைவில் இருந்து கொண்டு உழைக்க வேண்டியிருந்தது.

இங்கே எல்லோருமே முன்னணியில் இருந்து கொண்டு உழைக்கிருர்கள்.

அங்கே வெளி வீட்டுப் பிள்ளைகள் மாதிரி நடாத்தப்பட்டோம்!

இங்கே உள் வீட்டுப் பிள்ளைகள் மாதிரி நடாத்தப் படுகிருேம்!

அங்கே சமத்துவமும் சகோதரத்துவமும் ஏட்டளவோடு இருந்தது!

இங்கே அவை செயல் முறையில் இருக்கிறது!

அங்கே இருந்தபொழுது இருந்த மன நிறைவு உணவு விடுதியில் உண்பதால் வரும் மன நிறைவு!

இங்கே அனுபவிக்கும் மன நிறைவு வீட்டில் வளையல் கைகள் பரிமாற உண்பதால் வரும் மன நிறைவு!

இந்த வித்தியாசங்களுக்கு அடிப்படைக் காரணம் முன்பு இருந்த உறவு செயற்கையானது. இப்போதுள்ளது இயற்கையானது!

எங்களுடைய சங்கம் எதைச் சாதிக்காவிட்டாலும் இந்த நாட்டின் தொழிலியக்க வரலாற்றில் முதன் முறையாக தமிழ் அரசாங்க ஊழியர்களை ஒரு அணிக்குள் திரட்டிய வியத்தகு சாதனையைச் சாதித்திருக்கிறது!

இந்தளவில் தங்களது கடைந்தெடுத்த பச்சை வகுப்பு வாதக் கொள்கையால் எங்களது இன ரீதி கடந்த தொழிலாளர் ஒற்றுமைக் கண்ணேட்டத்துக்கு—பரந்த மனப்பான்மைக்கு முற்றுப்புள்ளி வைத்து விழித்தெழச் செய்த நமது முன்னுள் தோழர்கள் நன்றிக்கு உரியவர்கள்!

மாநாடு ஈட்டிய வெற்றிக் களிப்பில் மூழ்கிப் போகாமல் இந்தச் சந்தர்ப்பத்தில் எங்கள் கடமையையும் நினைவுறுத்த விரும்புகிருேம்.

எமது இலட்சியப் பயணம் மிக நீண்டது. அதில் கடந்த ஒரு ஆண்டு ஒரு மைல் கல்!

செய்து முடித்த பணி தினையளவு. செய்து முடிக்க வேண்டிய பணி பனையளவு.

மாநாடு தோற்றுவித்துள்ள எழுச்சி, மறுமலர்ச்சி, புத்துணர்ச்சி அங்கிங்கென்னுதபடி எல்லோரது உள்ளங்களிலும் ஊடுருவிப் பாய வேண்டும்!

எங்களது கொள்கைகள் தங்கமானவை. எங்களது இலட்சியம் புனிதமானது.

எங்களது கொள்கை முழக்கம், இலட்சிய கீதம் கேளாத செவிகளில் கேட்டல் வேண்டும், புகாத இதயங்களெல்லாம் புகுதல் வேண்டும்.

நாங்கள் பணியாற்றும் துறை எதுவானுலும், அவற்றில் எல்லாம் நாம் முன்னேடிகளாக, மற்றவர்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும்.

[7-ம் பக்கம் பார்க்க]

**காலம் ஒரு நாள் மாறும்!**

# கொடி நாட்டுவீர்!

—|—

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

எங்களது உள்ளத்தில் **கடமையுணர்ச்சி** இருக்கட்டும்.

எங்களது பேச்சில் **கண்ணியம்** இருக்கட்டும். செயலில் **கட்டுப்பாடு** இருக்கட்டும்.

முன் எப்பொழுதும் இல்லாத அளவிலும் வகையிலும் எங்களது இதயங்களில் தியாகவுணர்ச்சி பொங்கி வழிய வேண்டும்.

எங்களது கல்வி, கலை, கலாச்சார உயர்வுக்கு நிலைக்களமாக விளங்கும் கலைக் கோவில்களுக்கு முகம் கோணாது வாரி வழங்கும் வள்ளல் தன்மை மேலும் வளர வேண்டும்.

சமூகத்தில் படித்தவர்கள் என்ற முறையில் எங்களது பொறுப்பு அதிகம். நாம் மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாகவும்—முன்மாதிரியாகவும் விளங்க வேண்டும்!

மாற்றாரின் தூற்றலுக்கு, இழிமொழிக்கு, பழிச்சொல்லுக்கு அஞ்ச வேண்டாம்.

எமது இலட்சியபுரிப் பயணத்தில் இளநீர் நல்குவோர் நன்றிக்குரியவர்கள். இதயம்நோகப் பேசுவோர் பரிதாபத்துக்குரியவர்கள். முட்டுக்கட்டை போடுபவர்கள் கண்டனத்துக்கு உரியவர்கள்!

எனவே முன்பு கூறியதையே மறு முறையும் கூறிக்கொள்கிறோம்.

தமிழினத்தின் வரலாற்றின் முக்கிய திருப்பு முனையில் நாம் இருக்கிறோம்.

எங்கள் வீரம் விலை பேசப்படுகிறது! மானம் எடைபோடப்படுகிறது!!

இந்த விஷப் பரீட்சையில் தேறி வெற்றிக் கொடி நாட்டுமாறு உங்கள் ஒவ்வொருவரையும் தமிழ் அன்னை மீது ஆணையாகக் கேட்டுக்கொள்கிறோம்!

# செயலாற்றத் தொடங்குகிறோம்!

—:—:—

''சிங்களம் கற்பதில்லை'' என்று மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அமுல் நடத்துகையில் உறுப்பினர்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களுக்குப் பரிகாரம் காணும் பணியில் சங்கம் தீவிரமாக ஈடுபடத் தொடங்கியுள்ளது.

முதல் நடவடிக்கையாக உறுப்பினர்களின் உண்மை நிலையை அறியும் பொருட்டு ஒரு வினாப் பத்திரம் அவர்களுக்கு அனுப்பப்படுகின்றன. குடும்ப நிலை கல்வித் தராதரம், பயில விரும்பும் தொழில்கள், செய்ய விரும்பும் தொழில்கள் ஆகியனவற்றை உடனே அறிவிக்கும்படி உறுப்பினர்கள் கேட்கப்படுகின்றார்கள்.

அதே நேரத்தில் தமிழ் வர்த்தகர்கள், தொழில் அதிபர்கள் ஆகியோருக்கு வேண்டுகோளொன்றும் விடுக்கப்படுகிறது.

கொள்கைக்காக உறுதியோடு நின்று போராடும் ஊழியர்களுக்கு இயன்றளவு உதவி செய்யும் பொருட்டு, இனிமேல் ஏற்படவிருக்கும் காலி இடங்களை நிரப்பும் பொழுது எவ்வித உபகாரச் சம்பளமுமின்றி உத்தியோகத்தை இழக்கும் எமது உறுப்பினர்களுக்கு அவ்விடங்களை ஒதுக்கும்படியும், அதனைப் பற்றிய விபரங்களைத் தரும்படியும் கேட்கப்படுகின்றார்கள்.

சில தொழில்களைக் குறிப்பிட்ட ஒரு சாராருக்கு மட்டும் என்று ஒதுக்கித் தள்ளாது, தொழிலுக்கு மகத்துவம் கொடுத்து, எத்தொழிலையும் செய்ய எல்லோரும் முன் வந்தால், எமது பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் நாள் அதிக தூரத்திலில்லை என்பது உறுதி.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்—
சிறப்பெவ்வா
செய்தொழில் வேற்றுமையான்.

**இ. பாலசுப்பிரமணியம்,**
பொதுச் செயலாளர்.

## இடமாற்ற சபை

### எமது சங்கத்திலுமிருந்து ஓர் பிரதிநிதியை த்தேர்ந்தெடுக்கும் படி வேண்டுகோள்

எழுது வினைஞர் சேவைகளுக்காக ஏற்படுத்தப்படும் இடமாற்ற சபையில் பிரதிநிதித்துவம் வகிப்பதற்கு, எமது சேவையிலுள்ள மற்றச் சங்கங்களுடன் ஆலோசித்து ஒருவரை நியமிக்கும்படி திறைசேரி அறிவித்தது.

மற்றச் சங்கங்களுக்கும் எமக்கும் பல துறைகளில் ஒற்றுமைப்பாடு இல்லாதபடியாலும், அஞ்சல்எழுது வினைஞர் சேவையிலுள்ள எல்லாத் தொழிற் சங்கங்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருப்பதாலும், எமது பிரதிநிதியொருவரையும் அச்சபையில் அங்கம் வகிக்கத் தெரிவு செய்ய வேண்டுமென்றும் எழுதியுள்ளோம்.

## செயலாளர் குறிப்புகள்

### சங்கத்தின் தலையீட்டால் இடமாற்றம் இரத்தானது

மட்டுநகர் கமத்தொழிற் சேவை அலுவலகத்தில் கடமையாற்றிய திரு. V. தியாகராசா என்பவர், திடீரென மட்டுநகர் அரிசி ஆலைக்கு மாற்றப்பட்டதை ஆட்சேபித்துச் சங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பயனாக, அவரது இடமாற்றம் உடனடியாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

## நிறைவேற்று வகுப்பு தரம் II

### எல்லா வெற்றிடங்களையும் நிரப்புக

சென்ற மாதம் வெளி வந்த முடிவின்படி இம்முறை 171 பேரே தரம் II க்கு வகுப்பேற்றப்பட்டுள்ளனர். தரம் I க்கு நடைபெற்ற வகுப்பேற்றத்தால் ஏற்பட்ட வெற்றிடங்களையும் சேர்த்து 256 வெற்றிடங்களையும் நிரப்பும்படி முன் எழுதியுள்ள கடிதத்தை நினைவூட்டி மீண்டும் திறைசேரிக்கு எழுதினோம்.

(12ம் பக்கம் பார்க்க)

**நம் கவலைகள் யாவும் தீரும்!**

விளம்பரம்

# அஞ்சல் எழுது வினைஞர் சங்கம்

## ஓராண்டுநிறைவும்-வளர்ச்சியும்

சென்ற ஆண்டு ஜூலை மாதம் தொடங்கிய எங்கள் சங்கம் இவ்வருடம் ஜூன் மாதம் 30ந் திகதி அதன் வருடாந்தத் தினத்தைக் கொண்டாடுகிறது. வருடமொன்று பூர்த்தியாகிவிட்டதெனினும் சந்தர்ப்பம், சூழ்நிலை காரணமாக இன்னமும் நாம் குழந்தைப் பருவத்தில் தான் இருக்கிறோம்.

நாம் பிரிந்து சென்ற பொழுது எமது தாய்ச் சங்கத்தினர் தப்பபிப்பிராயம் காரணமாகவே நாம் பிரிகிறோம் என்று வருத்தந் தெரிவித்தனர். ஆனால் அது அப்படியன்று என்பது தற்பொழுது புலனுகிறது. சிங்களம் பேசும் அங்கத்தவரின் நலங்களில் மட்டுமே அவர்கள் அக்கறையுள்ளனரென்பது பின் வருவதால் நிரூபிக்கப்படுகின்றது.

அதன் (Postal clerical service union) வருடாந்த மகாநாட்டில் நிறைவேற்றப்படவிருக்கும் தீர்மானங்களுள் ஒன்றில் (5வது) ''புதிதாகச் சேர்ந்த சேவையாளர்கள் வசதிகட்கும் அவர்கள் தங்கள் மேற் சோதனைகட்கு ஆயத்தப்படுத்தவும், தபாற் தந்திப் பகுதி விதிகள், திட்டப் புத்தகங்கள் முதலியவற்றை அரசாங்க மொழியான சிங்களத்தில் உடனடியாகப் பிரசுரிக்கவேண்டுமெனக் கோருகின்றோம்.''

ஆனல் இதைக் கொண்டு வரத் தீர்மானித்துள்ள அதன் செயற்குழுவில் எம்மினத்தைச் சேர்ந்த சிறந்த நோக்கமும் பரந்த மனப்போக்குமுடைய இரண்டு அங்கத்தவர்கள் உளர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எமது அங்கத்தவர் பலரின் சம்பள உயர்வு உத்தியோக மொழிச் சட்டம் காரணமாகத் தடுக்கப்பட்டிருக்கின்றதெனினும் அவர்கள் தங்கள் கொள்கையை மாற்றவில்லையென்பதில் மகிழ்ச்சியடைவதோடு, சிலர் தங்கள் சொந்த நலன்களை முன் வைத்து இது காறும்—

''எது வரினும் படிப்பதில்லை'' என்ற தம் கொள்கையை மாற்றியுள்ள வருத்தமானசெய்தியும் நமக்குக் கிடைத்துள்ளது. இது காரணமாகச் சிலர் மனம் வெதும்புகின்றனர். ஆனல் ''இன்ன செய்தார்க்கும் இனியவை செய்ய வேண்டும்'' என்ற பொன்மொழியை நாம் மறந்துவிடக் கூடாது. ஏதோ தவறுதலாக இதை இவர்கள் செய்திருக்கக்கூடும். ஆழ்ந்து, சிந்தித்து தங்கள் மன மாற்றத்தை மாற்றுவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

எமது வருடாந்த மாநாட்டுடன் எமது அங்கத்தவர்களின் எண்ணிக்கையும் கூடுகின்றது. ஆனல் சேவையிலுள்ள எல்லாத் தமிழ்ப் பேசும் அங்கத்தினர்களும் சேரும் நாள் மிக அண்மையிலுள்ளது என்பதற்கும் அறிகுறிகள் தென்படுகின்றன.

## பிரதம தபால் அதிகாரி மறைவு

பதில் பிரதம தபால் தந்திப் பகுதி அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. சிவப்பிரகாசம் இவ்வுலகை நீத்துள்ளார் என்ற திடுக்கிடும் செய்தி கேட்டு மிக வருந்துகிறோம். இவ்வுயர் பதவி நியமனம் உறுதிப்படுத்தப்படு முன்னரே இக்கதி அவருக்கு நேர்ந்துள்ளது. இன மொழிச் சமயச் சார்பின்றி அனைவரையும் சமமாக மதிக்கும் உத்தமர் ஒருவரை அரசாங்க சேவை இழந்துவிட்டது. தபால் தந்தி அதிகார பீடம் அதனை அலங்கரித்த ஓர் மாணிக்கத்தை இழந்துவிட்டது. தமிழ் இனம் அரசாங்க சேவை உயர் பதவிக்கு அளித்த ஓர் வீரனை இழந்துவிட்டது.

அவர் பிரிவால் வாடும் உறவினருக்கும் நண்பர்களுக்கும் எமது சங்கச் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம். அவருடைய ஆத்மா சாந்தியடைவதாக.

மு. சி. நடராசா,
செயலாளர்,
அஞ்சல் எழுது வினைஞர் சங்கம்.

விளம்பரம்

# தமிழ் அரசாங்க ஊழியர் சங்கம்

இச்சங்கம் தோன்றிய காலந் தொட்டு அதன் செயலாளராகப் பணியாற்றி வந்த திரு. இ. நாகேந்திரம் 1-7-62 தொடக்கம் மொழிச் சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட சலுகையின் பிரகாரம் அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறிவிட்டார்.

சங்கத்திற்கு அயராது உழைத்து வந்த ஒரு அருமைச் செயலாளரை இழந்ததால் சங்கத்தின் பிரச்சினைகள் கூடியிருக்கின்றன. விரைவில் செயற்குழுக் கூட்டம் கூட்டப்பட்டு ஒரு செயலாளர் நியமிக்கப்படுவார்.

சங்கத்தின் செயலாளரென்ற முறையில் திரு. நாகேந்திரம் அனுப்பிய ஒருசுற்றுநிருபம் பற்றி பாராளுமன்றத்தில் சிலகேள்விகள் எழுப்பப்பட்ட விஷயம் உறுப்பினர்களுக்கு நினைவிருக்கலாம். அதை அடுத்து அவர் மேல் பரிபாலன விதியின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது அநேகருக்குத் தெரியாது. விசாரணையின் பின் அவரின் மேல் குற்றமில்லை என்று முடிவு செய்யப்பட்டதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். இதன் மேல்தான் அவர் இளைப்பாற அனுமதிக்கப்பட்டார். (இது விஷயம் பற்றிய விபரங்கள் அடுத்த 'எழுச்சி'யில் இடம் பெறும்).

திரு. நாகேந்திரத்தின் காலத்தில் தொடக்கப்பட்ட தொண்டு(மொழி வாரியாக தொழிற் சங்கங்கள் அமைத்தல்) முன்னேற்றமடையாதது பற்றி அவருக்குக் கடைசிவரை மனவருத்தம் இருந்ததையறிவேன். இனி மேலாகுதல் உறுப்பினர்கள்

(12ம் பக்கம் பார்க்க)

கடல் போலும் எழுக! கடல்
முழக்கம் போல் கழறிடுக!
தமிழ் வாழ்கென்று!

கெடல் எங்கே தமிழின் நலம்?
அங்கெல்லாம் தலையிட்டுக்
கிளர்ச்சி செய்க!

—பாரதிதாசன்.

# முதலாவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. 9-6-62ல் கூடிய ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் அரசாங்க எழுது வினைஞர் சங்கம் தீர்மானிப்பதாவது:-

அ (i) சிங்களம் மட்டும் சட்டத்திற்கு முன் சேவையிற் சேர்ந்த ஊழியரனைவரும் தமது ஓய்வு பெறும் வயதுவரை அல்லது (உடல் நலக் குறைவு அல்லது பதவி ஒழிப்புப் போன்ற) பிற காரணங்களுக்காக ஓய்வு பெறும் வரை எவ்வித இடர்ப்பாட்டிற்கும் தண்டனைக்கும் உள்ளாக்கப்படாது தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்பட வேண்டுமென்பது பொது விதியாயிருத்தல் வேண்டும்.

ஆனல்

(ii) ஓய்வு பெற விரும்புவோர் தமது 55வது வயதிற்குள் தாம் விரும்பும் பொழுது, வேண்டிய முன்னறிவித்தலுடன் பதவி இழப்பிற்குரிய நஷ்ட ஈட்டுடன் ஓய்வு பெற அனுமதிக்கப்பட வேண்டும்.

(iii) இளைப்பாற விரும்புவோருக்கு பதவி இழப்பிற்குரிய நஷ்ட ஈடு கீழ்க்காணும் முறையில் கணக்கிடப்பட வேண்டும்:

$$\frac{\text{சேவையிலிருந்த மாத எண்ணிக்கை} + 60}{\text{கடந்த பிறந்த தினத்தன்று வயது} \times 12} \times \left\{\begin{array}{l}\text{ஒய்வுபெறும் திகதியில் ஊழியரின்}\\ \text{தரத்திற்குரிய உச்ச வேதனம்}\\ \text{அல்லது அத்தரத்தில் அவரின்}\\ \text{55ம்வயதில் கிடைக்கக்கூடிய}\\ \text{வேதனம் ஆகிய இரண்டிற் குறை}\\ \text{வான தொகை.}\end{array}\right.$$

(iv) தொகுத்த வேதன (Commuted Pension)த்திற்குரிய வரம்பு 10 ஆண்டென வரையறுக்கப்பட்ட காலத்திருந்ததைவிட அநுமான வாழ்வுக் காலம் (Life expectancy) மிக உயர்ந்துள்ளதைக் கருத்திற் கொண்டு ஓய்வு வேதனத் தொகுப்புக் கணக்கீட்டு முறை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

ஆ (i) புதிதாகச் சேவையிற் சேர்ந்த தமிழ் ஊழியர்களின் வேலையும் நடத்தையும் திருப்திகரமாயிருந்தால், அவர்களையொத்த சிங்கள ஊழியர்களுக்கில்லாத நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உள்ளாக்காது வழக்கமான தகுதிகாண் காலமாகிய இரண்டாண்டுகளினிறுதியில் அவர்களனைவரையும் சேவையில் உறுதிப்படுத்த வேண்டும்.

2. (i) அரச கரும மொழிக் கொள்கையின் ஒருதலைப் பட்சமான அமுல் (அரசாங்க சேவையிலும், அரசாங்கக் கூட்டுச் சேவையிலுமுள்ள) தமிழ் பேசும் ஊழியர்களை, அவர்களையொத்த சிங்கள ஊழியர்களுக்கில்லாத, பாரதூரமான வசதியீனங்களுக்கும்,சமாளிக்க முடியாத இடர்களுக்கும் உள்ளாக்குவதாலும்,

(ii) சங்கம் இதுவரை அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறிய கருத்துக்களும் விடுத்த கோரிக்கைகளும் இதுவரை கவனிக்கப்படாததாலும் சங்க உறுப்பினர்களனைவரும் ஓர் ஒருமித்த தொழிற் சங்க நடவடிக்கையாகச் சிங்களம் படிப்பதைத் தவிர்க்க வேண்டும். மேலும் ஏனைய தமிழ் பேசும் ஊழியர்களையும் இவ்வாறு செய்யும்படி வேண்டிக்கொள்வதெனவும் சங்கம் தீர்மானிக்கிறது.

3. அரசாங்க சேவையிலிருந்தும், அரசாங்க கூட்டுச் சேவையிலிருந்தும் அரசாங்கத்தின் அரச கரும மொழிக் கொள்கை காரணமாக உரிய காலத்திற்குமுன் ஓய்வுபெறும் ஊழியர்களுக்கும், சேவையில் உறுதிப்படுத்தப்படாதவர்களுக்கும் புனர் வாழ்வளிக்கும் பொருட்டு,

(i) வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள பல்வேறு விவசாயக் குடியேற்றத் திட்டங்களில் அவர்களுக்கு நிலம் ஒதுக்கியும்,

(ii) சிறு கைத்தொழில்கள், விவசாயம், மீன்பிடித் தொழில் ஆகியவற்றிற்கும், இன்னேரன்ன பிற தொழில்களில் ஈடுபடுவதற்கு கடன் உதவியும், பிற சிறப்பு வசதிகள் செய்து கொடுத்தும், வேறு விதங்களில் உதவியளித்தும், அரசாங்கம் ஊக்கம் அளித்தல் வேண்டும்.

4. சுதந்திரமான, **தளையற்ற** தொழிற் சங்கங்கள் உண்மையான மக்களாட்சியின் கீழ்த்தான்செழிக்க முடியுமாதலாலும் அப்படியானஒரு மக்களாட்சி தொழிற்பட சுதந்திரமான தடையற்ற பத்திரிகைகள் அவசியமாதலாலும், நாட்டின் பொதுசன அபிப்பிராயத்திற்கு எவ்விதத்திலும் வாய்ப்பூட்டுப் போடும் தன்மைத்தான சட்டமெதையும் அரசாங்கம் செய்யாதிருக்க வேண்டும்.

5. வாழ்க்கைச்செலவு முடிவின்றி உயர்ந்துகொண்டிருக்கையில் வாழ்க்கைச் செலவுப் படி 1951ம் ஆண்டு நிலையிற்தான் இன்னும் வழங்கப்படுவதால், தேசிய அபிவிருத்தி வரி தொடர்ந்து விதிக்கப்படுவது தாங்கொணுச் சுமையாகையால், இவ்வரி உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

## வணக்கம்

அ. எ. வினைஞர் சங்க ஆண்டு மாநாட்டில் தோழர்கள் பலர் 'எழுச்சி'க்குச் சூட்டிய புகழ் மாலைகளைக் கேட்டு உண்மையிலேயே பூரித்துப் போனோம். சங்கத்தின் உரிமைக் குரலான 'எழுச்சி' உங்கள் இதயங்களைத் தொட்டிருப்பதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி.

'எழுச்சி' நடை பற்றித்தான் மனதில் சிறிது தயக்கம் இருந்தது. இனிமேல் முன்னைவிட வேகமாகவும் உறைப்பாகவும் எழுதுவோம்!

இழந்த உரிமைகளை மீண்டும் பெற நடக்கும், நமது அறப் போருக்கு 'எழுச்சி' வாளாகவும்—வேலாகவும் பணியாற்றும் என்பதை நீங்கள் பூரணமாக நம்பலாம்.

'எழுச்சி'யின் அளவையும் பக்கங்களையும் கூட்டி எழிலுடன் வெளியிடுவதற்குச் சங்கத்தின்நிதி நிலைமை தடையாக இருக்கிறது. போதிய விளம்பரங்களைச் சேர்ப்பதன் மூலமே இக்குறையை நிவர்த்தி செய்ய முடியும். இப்பணியில் உங்கள் ஒவ்வொருவரது உதவி—ஒத்துழைப்பு, எவ்வளவு சிறியதானுலும், அன்புடன் வரவேற்கப்படும்.

அன்புள்ள,
ஆசிரியர்.

# கைத்தொழில்

கலாநிதி ஆ. சுந்தரலிங்கம்
அதிபர்,
இலங்கை கைத்தொழில் நிலையம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## நீர் வளம்

உற்பத்தித் தொழில்கள் பலவற்றிற்கும் வேறெந்த மூலப்பொருளிலும் நீர் பெருவாரியாகத் தேவைப்படுகிறது. ஒரு நாட்டில் எல்லாப் பாகங்களிலும் ஒரே தன்மையாய் நீரைப் பெற முடியாது. அவை சிற்சிலப் பருவங்களிலேயே பெறக்கூடியனவாயுள. அதனுல் ஒரு பிரதேசத்தில் தொடங்கக்கூடிய கைத்தொழிலைத் தேர்ந்தெடுக்கும்போது, அங்கு பெறக் கூடிய நீரின் அளவையும் தன்மையையும், எவ்வளவு நீர் ஒரு குறித்த கைத்தொழிலுக்குத் தேவைப்படும் என்பதையும் ஆராய்ந்து அதற்கேற்ற கைத்தொழிலைத் தொடங்கல் வேண்டும். நீர் அதிகமாகவுள்ள ஓர் இடத்தில் பல வகைப்பட்ட கைத்தொழில் தொடங்கக் கூடியதாயிருக்கும். ஆகையால் அங்கு பெறக்கூடிய பிற மூலப் பொருள்கள் எவை, கூலி, தொழில் திறன் எத்தகையது என ஆராய்ந்தே ஒரு கைத்தொழிலைத் தொடங்கலாம். நீர் குறைவாக உள்ள இடங்களில், விசேடமாக வரண்ட பிரதேசங்களில், மிகக் குறைவாகவே நீர் தேவைப்படும் கைத்தொழிலைத் தொடங்குதல் நல்லது.

சில கைத்தொழிற்குத் தேவைப்படும் நீரின் அளவைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

| உற்பத்தி வேலை | தொகை | தேவையான நீர் |
|---|---|---|
| பழங்களைத் தகரத்தில் அடைத்தல். ... ... | 1 தொன் பழம். ... ... ... | 3,000 கலன். |
| காய் கறிகளைத் தகரத்தில் அடைத்தல். ... ... ... ... ... | 1 தொன் காய் கறி. ... ... ... | 6,000 ,, |
| சொக்கலேற்று விசுக்கோத்து முதலியன. ... ... ... ... ... | 1 தொன். ... ... .. | 4,000 ,, |
| சீனி. ... .. ... ... ... . . | 1 ,, ... ... ... ... | 10,000 ,, |
| மெல்லிய கடுதாசி. ... ... ... ... | 1 , , ... ... ... | 200,000 ,, |
| நூற்புடவை வெளிறச் செய்தல். ... ... ... | 1 ,, ... ... ... ... | 60,000 ,, |
| நூற்புடவைக்குச் சாயம் போடல். ... ... | 1 ,, ... ... ... ... | 40,000 ,, |
| நூல் பதப்படுத்தல். ... ... ... ... | 1 தொன் நூல், .. ... ... .. | 20,000 ,, |
| தோல் பதனிடல். ... ... ... ... | 1 தொன் தோல். ... ... ... | 15,000 ,, |
| றேயோன் புடவை. ... ... ... ... | 1 தொன். ... ... ... . | 300,000 ,, |

சில கைத்தொழில்களுக்கு நீரின் அளவு மட்டுமன்றி விசேடமான தன்மையான நீரும் தேவைப்படும். உணவுப் பொருள் வேலைகளில் உபயோகிக்கும் நீர் நல்ல உருசியுடைய நீராயும், நுண் கிருமிகளோ புளிப்பையுண்டுபண்ணக் கூடிய வேறெந்தப் பொருள்களோ அந்நீரிற் கலந்திருக்கக் கூடாது. தோல் வேலையில் உபயோகிக்கும் நீரில் இரும்புச் சத்து குறைவாயிருத்தல் வேண்டும். தெளிவான நீரில்லாவிட்டால், அதிலிருக்கும் அழுக்குகள் ஒருவித நிறத்தைக் கொடுக்கும். கடுதாசி செய்யும் போதும் புடவைத் தொழிலிலும் உபயோகிக்கப்படும் நீர், நிற மற்றதாய் தெளிவாய், மங்கனீசு இரும்புச் சத்து முதலியன ஓரளவுக்கே உள்ளதாயிருத்தல் அவசியம்.

## அடிப்படைத் தேவைகள்

உற்பத்தி வேலைகளுக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளை ஆராய்வோம். இவைகள் போக்குவரத்து வசதிகள், எரி பொருள், வலு ஆகியன. எங்கள் நாட்டில் வலுப்பெறக் கூடிய வசதிகள் மிகக் குறைவு, அன்றியும் பிற நாடுகளிலிருந்து கரி, எண்ணெய் முதலியவற்றை இறக்குமதி செய்து அதிலிருந்து வலுப்பெறுவதென்ருல் அது மிகவும் செலவாகும். நீர் வலு (Hydrel grid) விரிவாக்கப்பட்டு எங்கள் பகுதிகளுக்கும் கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆகவே எங்கள் பகுதிகளில் உள்ள இயந்திரத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய வலுவை வெப்பத்தினுல் பிறப்பித்தல் வேண்டும். இவ்வாறு வலுவைப் பிறப்பிக்கும்போது அதன் செலவு ஒரு அலகுக்கு(K W)10 அல்லது 12 சதமாகும். இந்த விலையில் அதிக வலு தேவைப்படும் கைத்தொழில்களுக்கு அதிகச் செலவு ஏற்படும்.

தமிழ்ப் பகுதிகளில் உள்ள வீதிகளும் புகைவண்டிப் பாதைகளும் மக்கட் போக்குவரத்துக்குப் போதுமானவையெனினும், கைத்தொழில் விருத்திக்குப் போதுமானவையன்று. திருக்கோணமலையிலிருந்து புல்மோட்டை, முல்லைத்தீவு, பருத்தித்துறைக்கூடாக காங்கேசன்துறைக்கு டீசல் வண்டி போகக்கூடிய வசதிகள் அமைக்கப்பட வேண்டுமென்பது எனது கொள்கையாகும். ஏனெனில் இல்மனைற்றுபோன்ற சிலகனிப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு நடத்தும் கைத்தொழில்களைக் குறைந்த செலவுடன் நடத்துவதற்கு இத்தகைய வசதிகள் பயன்

(11ம் பக்கம் பார்க்க)

# துரோகம்

**பணத்துக்காகக் காட்டிக் கொடுப்பவன், தான் புகழ்பெறக் காட்டிக் கொடுப்பவன், கோழைத்தனத்தால் காட்டிக் கொடுப்பவன் என்று துரோகிகளில் மூன்று வகையுண்டு. இம்மூன்றும் சேர்ந்த துரோகிகளும் உளர். இந்த வரிசையில் சேர்த்து எண்ண வேண்டியவர்கள் நமது மாஜி தோழர்கள்! அவர்கள் நடித்து அரங்கேற்றிய துரோக நாடகத்தின் முக்கிய காட்சி ஒன்றை அவர்கள் பார்வைக்குச் சமர்ப்பணம் செய்கிறேம்.**

**(ஆ-ர்)**

## குத்துக்கரணங்கள்

பின்னுல் கூறப்படும் விபரங்களை நோக்கினுல் லிகிதர் சங்கத்தின் கருத்துக்களும் கொள்கைகளும் மாறிவந்துள்ள விதம் நன்கு புலப்படும்.

(அ) 1956ல் புதிய அரசாங்கத்தின் மொழிக் கொள்கை பற்றி லிகிதர் சங்க ஆண்டுக் கூட்டத் தீர்மானம் கூறியது:- ''சங்கத்தின் உறுப்பினர்கள் ஆங்கிலத்தில் பணியாற்றவே சேவையில் சேர்ந்தவர்களாகையால் அவர்கள் இளைப்பாறும் வரை அவர்களின் தொழில் உயர்விற்கும் ஊதிய உயர்விற்கும் எவ்வித தடங்கலும் ஏற்படுத்தப்படக் கூடாது.''

**1960 நவம்பரில்** நிதி அமைச்சருக்கு அனுப்பிய 2ம் திகதிக் கடிதத்தின் 5(a) பந்தியில் (ஆங்கிலத்தில்) கூறியது:- ''அரச கரும மொழிச் சட்ட அமுல்(அம்மொழியில் தேர்ச்சியில்லாத) சிங்களம் மட்டும் சட்டத்திற்கு முன் சேர்ந்த ஊழியர்களுக்கு அவர்களின் நாளாந்த வேளையில் தடங்கல் ஏற்படா வண்ணமும், அவர்களுக்கு வழக்கமாகக் கிடைக்கக்கூடிய பதவியேற்ற வாய்ப்புக்களுக்குக் குந்தகம் விளைக்காதவாறும் செய்யப்பட வேண்டும்.''

**ஆனுல் 1960 டிசம்பரில்** மந்திரி சபை முடிவு பற்றிய 24ம் திகதிக் கடிதத்தின் 10ம் பந்தியில் (ஆங்கிலத்தில்)கூறியது:-''சிங்களத்தில் தேர்ச்சி இல்லாத ஊழியர்களைத் தண்டனைக்குள்ளாக்குவதற்குப் பதிலாக அம்மொழியில் தேர்ச்சி பெற உண்மையில் முயற்சிக்கும் எல்லா ஊழியர்களுக்கும் தூண்டுதல் விருப்பூதியம் (Incentive Bonus) வழங்க வழி செய்யும்படி கோரப்படுகிறது. ஆனுல் எந்த ஊழியராவது அரச கரும மொழிச் சட்ட அமுலை வேண்டுமென்றே எதிர்க்கும் விதத்தில் நடந்தால் அதனுல் விளையும் பலாபலன்களுக்குச் சங்கம் பொறுப்பேற்காது.''

(ஆ) சிங்களம் மட்டும் சட்டத்திற்குப் பின் சேர்ந்த ஊழியர்களின் தகுதிகாண் காலம்.

**1960 நவம்பரில்** நிதி அமைச்சருக்கெழுதிய 2ம் திகதிக் கடிதத்தில் மேற்குறித்த ஊழியரின் சேவை உறுதி பற்றி (ஆங்கிலத்தில்) கூறியது:- ''விதிக்கப்பட்ட கால வரையறைக்குள் சிங்களத் தேர்ச்சித் தேர்வில் சித்தியடையாவிட்டால் அதற்காகச் சேவை உறுதியைப் பின் போடாது குறித்த தேர்வில் தேறினுலும் தேருவிட்டாலும் இவ்வூழியர்களைச் சேவையில் உறுதிப்படுத்த வேண்டுமென்று கேட்கப்படுகிறது. இந்த நிலையில் சங்கம் பின் வருவனவற்றைச் சிபார்சு செய்கிறது:-

பழைய ஊழியர்களுக்குப் போன்று தகுதிகாண் காலம் இரண்டு ஆண்டுகளாகக் குறைக்கப்பட வேண்டும்.''

**1960 டிசம்பரில்** மந்திரி சபை முடிவு பற்றிய 24ம் திகதிக் கடிதத்தில் (ஆங்கிலத்தில்) சொல்லியது:- ''சிங்களவரல்லாருக்குச் சிங்களத் தேர்ச்சிக்குரிய 3ம் வகுப்புத் தேர்வு இரண்டு ஆண்டிலும், 5ம் வகுப்புத் தேர்வு மூன்று ஆண்டிலும் நடைபெற வேண்டும். இவர்கள் 5ம் வகுப்புத் தேர்வின் முடிவில் சேவையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.''

சேவை உறுதிக்குச் சிங்கள மொழித் தேர்ச்சியிருக்கக் கூடாதென்றும், 2 வருடங்கள் முடிந்தவுடன் சேவையில் உறுதிப்படுத்த வேண்டும் என்று நவம்பர் மாதத்தில் கோரியவர்கள், டிசம்பர் மாதத்தில், 5ம் வகுப்புச் சிங்களத் தேர்வின் பின்னும், 3 வருடங்கள் முடிந்த பின்னும் சேவையில் உறுதிப்படுத்த வேண்டும் என்று கோருகிறுர்கள்!

மேலும் லிகிதர் சங்கம் கூறியதாவது:-

''முடிவாக, அரச கரும மொழிச் சட்ட அமுலுக்கு நாங்கள் எந்த

(12ம் பக்கம் பார்க்க)

# கைத்தொழில்

(10ம் பக்கத் தொடர்ச்சி)

படும். புத்தளத்திலிருந்து முருங்கனுக்குப் போகக்கூடிய இத்தகைய ஒரு போக்குவரத்து வசதியுமிருந்தால், அப்பகுதிகளில் மக்களைக் குடியேற்றலாம்; அன்றியும் அப்பகுதிகளை அபிவிருத்தியும் செய்யலாம். இப்பொழுது அங்கே வீதிகளோ, புகைவண்டிப் பாதைகளோ இல்லாமையினுல், இப்பிரதேசம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. முருங்கனிலிருந்து பூனகரிக்கும், பரந்தனிலிருந்து பூனகரிக்கு மேலும் பல பாதைகள் தேவையாயிருக்கின்றன. நல்ல கப்பற் துறைகள் உள்ள இடங்களிலேயே கைத்தொழில் நன்கு விருத்தியடைவதைக் காண்கின்றேம், ஏனெனில் மூலப் பொருள்களை இங்கு இலகுவாக இறக்குமதி செய்யலாம். அன்றியும் இத்தகைய பட்டணங்களில் போக்குவரத்துச் செலவும் குறைவாயிருக்கும். கப்பல் மூலம் போக்கு வரத்தே மலிவானதெனப் பொதுவாகக் கருதப்படுகின்றது. ஆனுல் இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் திருகோணமலைத் துறைமுகம் மாத்திரம் உண்டு. ஆனுல் இந்தத் துறைமுகத்துக்கும் கைத்தொழில் நிலையங்கள் உள்ள பிற **இடங்களுக்குமிடையே வீதி வசதிகள் இல்லாமையால் இத்துறைமுகத்தை என்றும் நன்கு பயன்படுத்த இயலாமலிருக்கிறது. யாழ்ப்பாணத்திலேயோ மட்டக்களப்பிலேயோ போதியளவு சாமானை இறக்கவோ கப்பலைக் கட்டவோ போதிய வசதிகள் இல்லை. யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல் மிகவும் முக்கியமானது.**

மட்டக்களப்பில் அதிகமான தேங்காய் இருந்த போதிலும் தென்னந் தும்பு வேலைகளை அங்கு செய்ய முடியாமலிருக்கின்றது. ஏனெனில் இங்கு அத்தொழிலுக்கும் போதியளவு வசதியில்லை. இதே காரணத்தினுல் தேங்காயெண்ணையோ, கொப்பருவோ செய்ய முடியாமலிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் ஒரு சிமெந்துத் தொழிற்சாலையிருந்தும் 250 மைல்களுக்கு அப்பாலுள்ள கொழும்புச் சிமெந்தைக் கொண்டு வருவதற்குச் செலவு ஒரு தொன்னுக்கு 32 ரூபா. இது, ஓசாகாவிலிருந்து கொழும்புக்குக் கொண்டு வரும் செலவிலும் அதிகமாகும்.

(12ம் பக்கம் பார்க்க)

## கைத்தொழில்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

**வர்த்தகத் துறைமுகமொன்று யாழ்ப்பாணத்தில் இல்லாமையால், சிமெந்து உற்பத்திச் செலவு 20 வீதம் கூடியுள்ளது. அன்றியும் சிமெந்தை ஏற்றிச் செல்லும் செலவும் 100% கூடியுள்ளது,** இவற்றை நாம் இங்கு எடுத்துக் கூறியது எதற்கெனின், கப்பல் துறை வசதிகளும், கரையோரமாகக் கப்பற் போக்குவரத்துச் சேவைகளும் எவ்வளவு முதன்மையானவை என்பதைக் காட்டுவதற்கேயாம்.

அடுத்த கட்டுரையில் கைத்தொழில் வளர்ச்சியைப் பாதிக்கும் பிற காரணங்கள் எவை என்பதை ஆராய்வோம். (தொடரும்)

## துரோகம்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

விதத்திலும் மாறல்ல என்பதையும் அதற்கு எம்மால் முடிந்த எந்த உதவியையும் அளிப்போம் என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.''

முன்னுக்குப் பின் முரணுன மேற்

## செயலாளர்....

(7ம் பக்கத் தொடர்ச்சி)

1-10-61ல் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று பதில் கிடைத்துள்ளது.

### சிங்கள மொழியில் நியமனக் கடிதங்கள்

நிறைவேற்று வகுப்பு தரம் IIக்குரிய நியமனப் பத்திரங்கள் யாவும் தனிச் சிங்கள மொழியிலே இருந்தபடியால் இதனை ஆட்சேபித்து சங்கம் நீதி அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கும், திறைசேரிக்கும் எழுதியுள்ளது. அத்துடன் எமது உறுப்பினர்களுடன் வைத்துக்கொள்ளப்படும் தொடர்புகள் யாவும் அவர்கள் கடமையாற்றும் மொழியிலேயே இருக்க வேண்டுமென்று எல்லாத் திணைக்களங்களுக்கும் உத்தர விடும்படி நீதி அமைச்சுக்கு எழுதியுள்ளோம்.

படி கூற்றுக்களை வாசிக்கும் ஒவ்வொருவரும் அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் கூத்துக்கரணங்களை நன்கு புரிந்துகொள்ள முடியும்.

(அ. எ. வி, சங்க ஆண்டறிக்கை)

## தமிழ்....

(8ம் பக்கத் தொடர்ச்சி)

இது விஷயத்தில் அக்கறை காட்டி இன்னும் பல தொழிற் சங்கங்களை உருவாக்குவதில் வெற்றி கண்டு அடுத்த மே தினத்தை ஒரு தமிழ் பேசும் அரசாங்க ஊழியரின் தொழிற் சங்க ரீதியில் கொண்டாடுவோமாக.

**க, சிவானந்தசுந்தரம்,**
உதவி செயலாளர்.

62 1/5, குமாரன்
இரத்தினம் வீதி,
கொழும்பு.
5—7—62.

*********************

**எங்கள் மூச்சு!**

வெங்கொடுமைச் சாக்காட்டில்
விளையாடும் தோளெங்கள்
வெற்றித் தோள்கள்!
கங்கையைப்போல் காவிரிபோல்
கருத்துக்கள் ஊறுமுள்ளம்
எங்கள் உள்ளம்!
வெங்குருதி தனிற் கமழ்ந்து வீரஞ்
செய்கின்ற தமிழ்
எங்கள் மூச்சாம்!

—பாரதிதாசன்.

அழகாகக் காட்சியளிக்க
விரும்புகிறீர்களா ?
அதற்கு அத்தியாவசியமானது
ஆடை!
அளவுப் பிரகாரம் கணக்காகக் கை தேர்ந்த தையற் கலைஞர்களால் தைக்கப்படும் ஆடைக்கு நிகர் இல்லை. எந்தவிதமான ஆடை தைக்க வேண்டுமானுலும்
ஒரு முறை
வருகை தாருங்கள்
வீனஸ் டெயிலேர்ஸ்,
இல. 15, புதிய சோனக தெரு,
கொழும்பு.

கோழிப் பண்ணை அமைப்பதற்குத்
தேவையான
சகல கட்டிடச் சாமான்களும்
எங்களிடம் கிடைக்கும்.
நா. வைத்திலிங்கம் குழு (வரை)
38. 3-ம் குறுக்குத் தெரு,
450, பழைய சோனக தெரு,
கொழும்பு.

அரசாங்க எழுது வினைஞர் சங்கத்திற்காக கொழும்பு 13, வாசல ரேட், டொமினியன் அச்சகத்தில் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.